# கிருபையுள்ள வார்த்தை
KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 19 | September செப்டம்பர் | 2018

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது...

1 தீமோ 6:10




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...


பொருளாதாரத்தை நிர்வகித்தல் 3

பண ஆசையும் அதன் தீமைகளும் 8

பெண்கள் பகுதி 11

சிறுவர் பகுதி 13


*In memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,

**R. ஆன்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு**

**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 6:45 மணி**


செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**

Advanced Bible Correspondence Courses Available in English







சென்னை, சருக்கஞ்சேரி கிறிஸ்துவின் சபையில் நமது ஆசிரியர் ஆத்தும ஆதாயம் பற்றி சிறப்பு வகுப்பு நடத்திய போது...

**கிருபையுள்ள வார்த்தை**

**பணத்தை பற்றி சரியான மனப்பாங்கை உண்டாக்கும், பரம பிதாவின் வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 96**

ஆசிரியர் உரை

# நம்முடைய பொருளாதாரத்தை நிர்வகித்தல்

## Managing our Money

P.C. பிலேமோன் ராஜா



*அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இறைமகன் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.*

பொருளாதாரம் என்பது ஒரு தேசத்தை நிர்வகிக்கவோ, ஒரு நிறுவனத்தை நிர்வகிக்கவோ அல்லது ஒரு குடும்பத்தை நிர்வகிக்கவோ மிக முக்கியமான ஒன்றாகும். இம்மாத செய்திலும் குடும்பங்களில் பொருளாதாரத்தை (பணம் மற்றும் சொத்தை) நிர்வகிப்பதை பற்றி பைபிள் என்ன சொல்கிறது என்று அறிந்துகொள்வோம்.

### 1. நான் ஒரு மேற்பார்வையாளன்

'நான், கடவுள் எனக்கு கொடுத்த சொத்துக்களை மற்றும் பணத்தை, நிர்வாகிக்கும் ஒரு மேற்பார்வையாளன் மட்டுமே' என்ற சிந்தை நம்மிடையே இருப்பதில்லை. இந்த பூமியும், அதில் இருக்கின்ற யாவும் கர்த்தருக்கு சொந்தமானது. ஆகையால் இங்கே இருக்கும் நாட்களிலெல்லாம் நான் அதை நிர்வகிக்கும் மேற்பார்வையாளன் மட்டுமே. **சங் 24:1** "பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது."

இந்த அண்டசராசரமும் இதில் இருக்கின்ற ஒவ்வொன்றும் தேவனுடைய படைப்பு! அவரே ஒன்றுமில்லாமையிலிருந்து அனைத்தையும் உண்டாக்கினார். நாம் இங்கே ஒன்றை உண்டாக்குவதாக இருந்தாலும், அதற்கான மூலக்கூறுகள் அனைத்தும் தேவனுடையதே! **1 கொரி 4:7** "அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார் ? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது ? நீ பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?"

இன்றைக்கு தேவன் கொடுத்திருக்கும் பொருளாதார உயர்வை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும், தங்கள் பார்வையை (மனதை) தேவன் மீது வைக்காமல், அந்த பொருளாதாரத்தின் மீது வைக்கின்றனர். அந்த பார்வையே 'பொருளாசை' என்பதாகும். ஆகையால் தான் இயேசு கிறிஸ்து, பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள் என்று எச்சரித்தார், **லூக்கா 12:15** "பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்."

மேலும் தேவன், அவ்வாறு பொருளாசையுடன் செயல்பட்டவனை 'மதிகேடனே' என அழைப்பதிலிருந்து, அப்படிப்பட்ட செயலை செய்வது மதிகேடானது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. **லூக்கா 12:20, 21** "தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

நம்மிடம் 'பராமரிக்கும்படியாக' தேவன் கொடுத்த செல்வத்தைக் குறித்து நாம் பெருமையடித்துக் கொள்கிறோமா? தேவனே மகிமைக்குரியவர் என்பதை மறந்து விட்டோமா? பணத்தையா? பொருளையா? உறவையா? படிப்பையா? எதை நாம் மகிமைப்படுத்துகிறோம். தேவனை மகிமைப்படுத்த தவறிய பெல்ஷாத்சாரின் பேரரசு கவிழ்ந்து போனதை நினைவில் கொள்வோம் **(தானி 5:22-23).**

### 2. முதலிடம் தேவனுக்கே உரியது

**மத் 6:33** "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."

வருமானத்தில் முதல் பங்கை தேவனுக்கு கொடுக்கிறோமா ? அல்லது குடும்ப செலவுகள்போக, மீந்திருக்கும் மிச்சம் மீதியை தேவனுக்கு கொடுக்கிறோமா? தேவனுக்கு கொடுக்கின்ற காரியத்தில் நாம் எப்படி இருக்கிறோம்? அதைக் குறித்த நம் மனோநிலை என்னவாயிருக்கிறது என்பதை குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

வேதாகமம், வரவுக்கு தக்கதாக நம்மை கொடுக்கும்படி உற்சாகப்படுத்துகிறது. (Each Should give as Prospered). வருமானத்தை மீறி நம்மை கொடுக்கும்படி தேவன் வற்புறுத்தவில்லை. அதாவது,

தேவன் நம்மை ஆசீர்வதித்ததற்கு ஏற்ப நாம் கொடுக்க வேண்டும். **1கொரி 16:2** "நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்."

அடுத்தபடியாக பைபிள், நாம் தேவனுக்கு கொடுப்பதை மனதில் தீர்மானிக்கும்படி கொடுக்கச் சொல்கிறது. (Each Should give as you Purpose in your heart). அதாவது, என் வருமானம் இவ்வளவு; இதில் இத்தனை சதவீதம் நான் தேவனுக்கு கொடுக்கப் போகிறேன் என்ற முடிவு (திட்டமிடல்) நமக்கு இருக்க வேண்டும். **2 கொரி 9:7** "அவனவன் விசனமாயுமல்ல. கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."

மேலும், அதனை உற்சாகமாக செய்ய வேண்டும் (Each Should give Cheerfully). அதாவது ஆர்வமாக, ஆசையாக, பேரானந்தத்துடன் நாம் தேவனுக்கு கொடுக்க வேண்டும். அதற்கு நமக்கு, கொடுப்பதை பற்றியும், பணத்தை பற்றியும், தேவனை பற்றியும் சரிதான புரிதல் மிகமிக அவசியமான ஒன்றாகும். அப்படிப்பட்ட புரிதல் இல்லாதபடியினால் தான், இஸ்ரவேலர்கள் தேவனை ஏமாற்ற (வஞ்சிக்க) செய்தனர். **மல்கியா 3:8-9** "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா ? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்."

தேவனை எப்படி ஏமாற்ற முடியும்? அவர்தான் எல்லாம் அறிந்தவராயிற்றே என்பதே நம் எண்ணம். அவருக்கு தெரியாமல் அவரை ஏமாற்றுவது அல்ல; அவருக்கு கொடுக்க வேண்டியதை கொடுக்காமல் ஏமாற்றுவதாகும். இங்கே தேவனை வஞ்சிப்பதாக நினைத்து மனிதன் உண்மையிலேயே தன்னைத்தானே வஞ்சித்து, தன் வாழ்வை சாபமாக்கிக்கொள்கிறான். மீண்டும் அந்த வாழ்வை ஆசீர்வாதமாக்கிக் கொள்வதற்கான வழியையும் தேவனே சொல்கிறார் என்பதிலிருந்து, நம்மை குறித்த தேவனுடைய அக்கரையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். **மல் 3:10** "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகனிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவேன்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

### 3. இயன்றதை செய்வோம் இல்லாதவர்களுக்கு

நம்முடைய தேவன் திக்கற்றவர்கள் மற்றும் விதவைகள் மீது அக்கறை உள்ளவர். அவர்கள் கைவிடப்படுவதை அவர் விரும்புவதில்லை. அவர்களுக்கு உதவிட வேண்டும் என்பதே நம்மை குறித்த தேவனுடைய விருப்பமாக இருக்கிறது. நம்மால் இயன்றவரை நிச்சயம் உதவி செய்ய வேண்டும். அதிலே கஞ்சத்தனம் கூடாது. சிக்கனம் என்ற பெயரிலே கஞ்சமாக இருப்பதும் வறுமைக்கு வழிவகுக்கும். **நீதி 11:24** "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு."

செலவுகளை குறைத்துக்கொள்வது, ஆடம்பரத்தை தூக்கி எறிவது, பகட்டு வாழ்க்கைக்கு விடைகொடுப்பது தான் சிக்கனம். அவசியத்தை (இயலாதவர்க்கு உதவுதல்), அத்திவாசியத்தை (உண்ணவும், உடுக்கவும்) சந்திக்காமல் இருப்பது அல்ல. **லூக் 6:38** "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படுமென்றார்."

பைபிள், உன்னால் உதவி செய்ய முடிந்த போது, தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யாமல் விட்டுவிடாதே என்கிறது. **நீதி 3:27, 28** "நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல்இ ராதே.உ ன்னிடத்தில்பொ ருள்இ ருக்கையில்உ ன் அயலானை நோக்கி : நீ போய்த் திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே."

ஏனெனில் பணம் மனிதனுக்கு சந்தோஷம் தருவதில்லை (Realize money cannot buy happiness) **பிர. 5:10** "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே." ஆகையால் நாம் சரியான கண்ணோட்டத்தில் பணத்தை ஆய்வு செய்து,

முடிவெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும் (Put money in the Proper Perspective). **நீதி 23:4–5** "ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்."

பணத்தை வைத்து யாரையும் எடைபோட முடியாது, உதாரணத்துக்கு பணக்காரர்கள் ஏழைகளை பார்த்து, 'இவங்க எல்லாரும் சோம்பேறிங்க, உழைக்க தெரியாதவங்க' என்று நினைக்கலாம். ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்து, 'இவங்க எல்லாரும் பேராசை பிடிச்சவங்க' என்று நினைக்கலாம்.

பண ஆசையை தவிர்க்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். பணத்தையும், சொத்து சுகத்தையும் பெரிதாக நினைக்கிற ஆட்களோடு பழகாதீர்கள். பணத்தைவிட நல்ல குணங்களை பெரிதாக மதிக்கும் நபர்களோடு பழகுங்கள்.

பண ஆசை உங்களுக்குள் வேர்விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களைவிட, குடும்பத்தைவிட, உங்களைவிட பணம் முக்கியம் இல்லை. பணம் தேவைதான், ஆனால் பணமே வாழ்க்கையாகிவிடாது.

### 4. பணத்தால் வாங்க முடியாதது...

பணம் என்பது இந்த உலகத்தில் பிரதானமாக்கப்பட்டாலும், பணத்தால் வாங்க முடியாத காரியங்கள் நிறைய உண்டு என்பதே நிசப்தமான உண்மை.

#### அ) தெய்வீக வல்லமை மற்றும் மகிமை

**அப் 3:6** "அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;"

"பொன்னும் வெள்ளியும் இல்லை"; ஆயினும் நிற்க, நடக்க, உழைக்க முடியாதவனிடம் தெய்வீக வல்லமை, தெய்வீக மகிமை வெளிப்பட்டது.

இந்த உலகம கேட்கிறது, 'உன்னுடைய மணிபர்சில் எவ்வளவு (அ) என்ன இருக்கிறது?' மாறாக வேதம் கேட்கிறது, 'உன் இருதயத்தில் என்ன இருக்கிறது? ஏனெனில்' உலகமும் வேதமும் ஒருநாளும் ஒத்துப்போகாது. இவைகளில் நம்முடைய மனம் எதில் நாட்டம் கொண்டுள்ளது. **மத் 6:19–21** "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."

நம்மில் சிலர் வலது கையில் வேதத்தையும், இடது கையில் உலகத்தையும் பிடித்துக்கொண்டு நிற்கவே விரும்புகிறோம். ஆனால் இரண்டில் ஒன்று மட்டுமே நம்முடன் இருக்கும். அதையும் மீறி, இல்லை எனக்கு இரண்டும் வேண்டும் என முயற்சிப்போர், இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யவே முடியாது. இருவரிலும் அன்பு கூறவே முடியாது, என்று சொன்ன இயேசுவின் போதனையை மீறி நடந்து கிறிஸ்துவை எதிர்கின்றவர்களாக இருக்கின்றனர். **மத் 6:24** "இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது."

#### ஆ) தேவ ஆசீர்வாதம் மற்றும் உதவி

**யாக் 4:2** "நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக் கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை."

பரலோக பரிசுத்த கடவுள் நமக்கு, பொங்கி வழியும் பரிசுகள், ஆசீர்வாதங்கள், ஆவிக்குரிய தகுதிகள், அளவு கடந்த நித்திய வாழ்வை வைத்திருக்கிறார். நாமோ, அவை எதையுமே கேட்கவே இல்லை (ஜெபிக்கவில்லை); ஆகையால், நீங்கள் விண்ணப்பம் பண்ணாததினாலே அவைகள் உங்களுக்கு சித்திக்கவில்லை (வாய்க்கவில்லை) என்கிறார்.

நாம் ஆவிக்குரிய பணக்காரனாக பசிக்கொள்ள வேண்டும். அநேகர் தேவனுடைய காரியங்களில், பிச்சைக்கார நிலையைவிட கீழே உள்ளோம் என்பது வேதனைக்குரியது. ஒரு பெரிய Mallக்கு போய் தேடி அலைந்தும் திருப்திகரமாக கிடைக்காமல், சில

வேளைகளில் திரும்பி வருவோமே, அப்படி தான் ஆவிக்குரிய நிலையில் உள்ளோமா? ஆவிக்குரியதை பெற்றுக் கொள்வதற்கான தொடர் முயற்சி நம்மிடம் இருக்க வேண்டும்.

உலக காரியங்களில் போதும் என்ற மனதிருப்தி உள்ளதா? **1தீமோ 6:6** "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்." 'திருப்தி' என்ற நிலை, சில கிறிஸ்தவர்களுக்கு வரவே வராது?

ஏனென்றால், அவர்கள் தங்கள் இச்சை நிறைவேற வாழ விரும்புவதால், திருப்தி அடைவதை நோக்கி செல்ல இயலாது, மற்றும் தேவனுடைய ஒத்தாசையும் பெற முடியாது. **யாக் 4:4** "விபச்சாரரே, விபச்சாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்."

திருப்தி என்பது பிறருக்கு தீமை செய்யாது, பிறரை பாதிக்காது மற்றும் தன் (சுய) லாபத்திற்காக செயல்படாது என்பதை நினைவில் கொள்வோம்.

### இ) நற்பெயர் (நற்சாட்சி)

**நீதி. 22:1** "திரளான ஐசுவரியத்தைப்பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது; பொன் வெள்ளியைப்பார்க்கிலும் தயையே நலம்."

நல்ல பெயரை பணத்தினால் வாங்கிவிட முடியாது. பணம் வைத்திருப்பவரைவிட நல்ல குணம் வைத்திருப்பவரே சிறந்தவராக மக்கள் மனதில் இருக்கின்றனர் என்பதே இந்த உலகத்தின் வரலாறாகும். பணத்தினால் நற்பெயரை சம்பாதிக்க முடியும் என்றால், தேவகுமாரன் மனிதான பிறந்த போது, மாளிகையில் அல்லவா பிறந்திருப்பார். மாறாக, ஒரு ஏழ்மை குடும்பத்தில் அல்லவா பிறந்தார். அவரது குணமே (அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு, பரிசுத்தம்) இன்று அநேகரை அவர்பால் ஈர்த்துள்ளது.

கடையிலே பணம் கொடுத்து நற்பெயரை வாங்கி வர முடியுமா? முடியவே முடியாது! ஆகவே பெரிய படிப்பாளி, பெரிய அறிவாளி, பெரிய வியாபாரி, பெரிய பணக்காரர் என்ற இந்நிலை எடுக்க முயற்சி செய்வதைவிட, நற்பெயரை எடுக்க முயற்சி செய்வோம். தியாக உணர்வோடு வாழ்ந்து, இருந்ததை எல்லாம் இழந்து, இந்த உலகத்தை விட்டு செல்லும் போது வெறுமையாக சென்ற காந்தி, காமராஜர், கக்கன், ஜீவா போன்றோர் நற்பெயரை பெற்றது எதினால்? யோசித்து பார்ப்போம்!

நீதிமொழி 31ல், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தும் ஒழுக்கம் மிகுந்த, நற்பண்புள்ள பெண்ணை பற்றி கனத்திற்குரிய வார்த்தைகள் சொல்லப்படுகிறது. 'அழகி' சிறந்தவளா? 'நற்குணசாலி' சிறந்தவளா? அழகிய தோல் வயதானால் குறையுமே, நற்குணமோ அதிகரிக்கிறது. மாற்றான் தோட்டத்து மல்லிகையாகிய ரூத், அவளது நற்குணத்தால் அல்லவா இன்றும் புகழப்படுகிறாள். பணம் இதை தருமா? நிச்சயம் இல்லை என்பதே நமது பதிலாக இருக்கும்.

### ஈ). இரட்சிப்பும் அதின் மகிழ்ச்சியும்

**அப் 8:39** "அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம்அ வனைக்க ணாமல்,ச ந்தோஷத்தோடேத ன்வ ழியே போனான்."

பணம் கொடுத்து இரட்சிப்பையும் அதின் சந்தோஷத்தினையும் பெற முடியமா? முடியவே முடியாது! தாவீது, இரட்சண்யத்தின் சந்தோஷத்தை தேவன் தரும்படி அவரிடம் மன்றாடுகிறார் **(சங் 51:12).** மேலும் 49வது சங்கீதத்தில் பணத்தால் இரட்சிப்பை பெறவே முடியாது என்று உறுதிபட கூறுகிறார்.

இரட்சிப்பின் மகிழ்ச்சி என்பது உள்மனச்சமாதானமாகும். அதாவது பாவமும், பாவகுற்ற உணர்வும் நீக்கப்பட்டதினால் (அவமானம் மற்றும் மனச்சாட்சியிலுள்ள செத்த கிரியைகளை நீக்கியுள்ளது) வருகின்ற ஒன்று ஆகும். எத்தியோப்பிய மந்திரி இப்படிப்பட்ட இரட்சிப்பின் சந்தோஷத்தோடு போனான் என்று **(அப் 8:24–39)** பைபிள் சொல்கிறது.

பணத்தால் எல்லாவற்றையும் வாங்க முடியாது. பணத்தை வைத்துக்கொண்டு, சாப்பாட்டை வாங்கலாம் பசியை வாங்க முடியாது! மருந்தை வாங்கலாம், ஆரோக்கியத்தை வாங்க முடியாது, மெத்தையை வாங்கலாம், தூக்கத்தை வாங்க முடியாது! புத்தகத்தை வாங்கலாம், புத்தியை வாங்க முடியாது! நகையை வாங்கலாம், அன்பை வாங்க முடியாது! கூட்டத்தை

வாங்கலாம், நண்பர்களை வாங்க முடியாது! வேலைக்காரர்களை வாங்கலாம், விசுவாசத்தை வாங்க முடியாது! என்று, நார்வே நாட்டு கவிஞர் 'கர்பார்க்' சொன்னார். வாழ்வதற்கு பணம் தேவைதான், ஆனால் பணமே வாழ்க்கையாகிவிடக் கூடாது. இந்த உண்மையை உணரும் ஒருவர் திருப்பதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வார். "பண ஆசை எல்லா விதமான தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" **(1தீமோத்தேயு 6:10)** என்று பைபிள் சொல்கிறது.

பணம் வைத்திருப்பது தப்பில்லை. ஆனால், பணத்தின் மீது ஆசை வைத்திருப்பதுதான் தப்பு. பணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது, உறவுகளுக்கு இடையே விரிசல்கள் ஏற்படலாம்.

### இறுதியாக,

அன்பான சகோதரனே, சகோதரியே! இந்த உலகம் அதினுடைய வியாபாரத்தை அதிகரிக்க, ஆடம்பரத்தை விளம்பரம் செய்கின்றது. கிலோ கணக்கில் நகை அணிந்து வருகின்ற பெண்ணை விளம்பரங்களில் பார்க்கும் போது, இன்னொரு பெண்ணிற்கு, "குண்டு மணி தங்கமாவது வாங்க வேண்டும் என்ற சிந்தனையை தூண்டுவதே, அதன் வெற்றி. வெண்மை என்பதும் வியாபாரத்தின் கவர்ச்சியே! வெள்ளையாக இருப்பது தான் அழகு என்று உங்களுக்கு யார் சொல்லி கொடுத்தது? ஊமையையும், முடவனையும், குருடனையும் உண்டாக்கினவருக்கு உங்கள் நிறத்தை தீர்மானிக்கும் உரிமை இல்லையா? எங்கே? எதை நோக்கி சென்றுக்கொண்டிருக்கிறோம்? எத்தியோப்பியன் தன் தோலை மாற்ற முடியாதே **(எரே 13:23).** ஆயினும் கருப்பை வெள்ளையாக்கவும் (நிறம்), வெள்ளையை (முடியை) கருப்பாக்கவும் என்ன ஒரு விடாமுயற்சி! சரி, அதைப் போன்ற முயற்சி, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் இருக்கிறதா? கோபத்தை தூக்கியெறிந்து சமாதானத்தை விதைக்க, பாவத்தை விட்டுவிட்டு பரிசுத்தத்தை பற்றிக்கொள்ள, சுயநலத்தை மற்றும் சுயநீதியை சாகடித்து, தேவநீதியை, பிறர்நலம் பேணுதலை வாழவைக்கும்படி இருக்கிறதா? சற்று நிதானித்து யோசித்து பாருங்கள். நிரந்தரமற்றதின் பின்னால் ஓடி நித்தியத்தை இழந்துவிட வேண்டாம்.

**– அன்புடன், ஆசிரியர்**

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# பண ஆசையும் அதன் தீமைகளும்

ஆண்டனி ராஜா
துணை ஆசிரியர்



பிரியமானவர்களே ! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலே வாழ்த்தி, இவ்விதழின் வழியே சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உலகம் தீமைகளினால் நிறைந்திருக்கிறது. தினமும் செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற எல்லாவற்றிலும் உலகத்தில் நம்மை சுற்றி நடக்கிற தீமைகளை பற்றி நாம் அறிந்துகொள்ள முடிகிறது. "பணஆசை எல்லா தீமைக்கும் வேர்" என பைபிள் சொல்கிறது. ஆகையால் பண ஆசையைக் குறித்தும் அதன் தீமைகளைக் குறித்தும் நாம் வேத வசனங்களின் துணைகொண்டு அறிந்துகொள்ள முயலுவோம்.

## 1. பணம் என்பது என்ன ?

ஆரம்ப காலத்தில் பண்டமாற்று முறையே மனிதர்களிடம் புழங்கி வந்தது. உதாரணமாக, வயலிலே வேலைபார்ப்பவர்களுக்கு கூலியாக விளைச்சலில் ஒரு பகுதி கொடுக்கப்பட்டது. உப்பை கொடுத்து தானியத்தை வாங்கி கொள்வார்கள். நாளடைவில் நாணயங்கள் (பணம்) வந்தது என்பது, நாம் அறிந்ததே.

பணம் என்பது மக்கள் தங்களுக்கு இடையே பொருட்கள், சேவைகள் முதலியவற்றை எளிதாக பரிமாறிக்கொள்ளவும், கடன்களை திருப்பி செலுத்தவும், ஒரு அரசால் உறுதியளிக்கப்பட்ட ஈடான மதிப்புடைய ஒன்று.

## 2. பண ஆசை என்பது என்ன ?

பணஆசை என்பது என்ன? என்பதும், அது என்னிடம் இருக்கிறதா ? என்பதும் பதிலறிய வேண்டிய முக்கியமான கேள்விகளாகும். அதை அறிந்துகொள்ள நம்மை நாமே சில கேள்விகளை கேட்டறிந்துகொள்வோம்.

* வேகமாக பணக்காரர் ஆகுற திட்டங்களில் சேர ஆசைப்படுகிறேனா ?
* எப்பவும் பணம், சொத்து இவைகளைப் பற்றி பேசுகிறவர்களுடனேயே பழகுகிறேனா ?
* பணவிஷயங்களில் பொய் பேசுகிறேனா ?
* பணம் வைத்திருந்தால் தான் என்னை மதிப்பாங்கன்னு நினைக்கிறேனா?
* எப்பொழுதும் பணத்தை பற்றியோ, சொத்து சேர்ப்பதை பற்றியோ பேசிக் கொண்டிருக்கின்றேனா? அல்லது சிந்திக்கின்றேனா?
* கடன் வாங்குகின்ற காரியத்தில் பேராவல் கொண்டிருக்கின்றேனா ?
* வரவுக்கு மீறி செலவு செய்கிறேனா ?
* தேவனுக்கு கொடுக்கிற காரியத்தில் திட்டமிடல் இல்லையா ? (அந்த நேரத்தில் என்ன
* தோன்றுகிறதோ அதை கொடுக்கும் பழக்கம்)
* இயலாதவர்களுக்கு உதவுவதில் தாராளமாக இருக்கிறேனா? அல்லது, கஞ்சனாக இருக்கிறேனா?
* எப்பொழுதும் என் மணிபர்சில் பணம் நிறைந்தே இருக்க விரும்புகிறேனா?
* பணம் குறைவாக இருந்தாலோ, பணமே இல்லாவிட்டாலோ விரக்தியடைகிறேனா ?
* குடும்பத்தில் ஏதாவது திடீர் செலவு வந்துவிட்டால், கோபமடைகிறேனா ?
* 'பணமே பிரதானம்' என்று எண்ணி, அதின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேனா ?
* செலவழிக்கும் போது பழைய அல்லது மோசமான பணத்தை அடுத்தவரிடம் கொடுத்துவிட்டு, புதிதாக நன்றாக இருக்கின்ற பணத்தை மட்டும் எனக்கென்று வைத்துக்கொள்கிறேனா ?
* இந்த கேள்விகளில் ஏதேனும் ஒன்றிற்கோ, ஒன்றிற்கு மேற்பட்டதிற்கோ, நான் 'ஆம்' என்று சொல்லியிருந்தால், என்னிடம் பண ஆசை இருக்கிறது என்று பொருள்.

## 3. பண ஆசைகளின் தீமைகள் என்ன ?

### அ ) பாவத்தில் விழுதல்

ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள்

சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழத்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். **( 1 தீமோ 6:9 ).**

பைபிள், பணஆசை உள்ளவர்கள் அவர்களுக்கே கேட்டையும், அழிவையும் உண்டாக்குகிற மதிகேடான பலவித இச்சைகள் சோதனைகள் மற்றும் கண்ணிகளில் விழுகிறார்கள். ஒன்று இரண்டல்ல பலவித பாவங்களில் விழுந்து அழியும் அபாயம் பணஆசை உள்ளவர்களுக்கு வரும் என்கிறது.

எல்லா தீமைக்கும் (பாவத்திற்கும்) வேர், மனிதன் பணத்தின் மீது கொண்டிருக்கும் ஆசையே! விபச்சாரம், வேசித்தனம், திருட்டு, கொலை, கொள்ளை, விக்கிரகாராதனை போன்ற இன்னும் அநேக பாவங்களை மனிதன் செய்ய, பல காரணங்கள் மேலோட்டமாக கூறினாலும், அதின் வேர் பண ஆசையாக தான் இருக்கிறது என்பதே அப்பட்டமான உண்மையாக இருக்கிறது.

பைபிளின் எச்சரிப்பை மறந்துவிட வேண்டாம். "ஐசுவரியவனாக வேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோகும்." **(நீதிமொழிகள் 23:4, 5).**

### ஆ ) விசுவாசத்தை விட்டு விலகுதல்

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசித்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்." **(1 தீமோ 6:10).**

பண ஆசையுள்ளவர்கள் விசுவாசத்தைவிட்டு வழுவுகிறார்கள் அல்லது விலகுகிறார்கள் என பண ஆசையின் அடுத்த தீமையைப் பற்றி பைபிள் சொல்கிறது. சபைக்கூடுகையை தவறவிடும் ஒவ்வொருவரும் சொல்லும் காரணங்களை பாருங்கள். 'இன்னைக்கு இரண்டு மடங்கு சம்பளம்,இன்றைக்கு சம்பள நாள், இன்றைக்கு முக்கியமான பரிட்சை'. இதற்கெல்லாம் காரணம் என்ன? பண ஆசை!

தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை பணத்திற்கு கொடுக்கின்றனர். இதற்கு பெயர்தான் பணஆசை! ஆனால் தங்களிடம் பணஆசை உள்ளதை ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆயினும் அவர்கள் தேவனைவிட்டு, விசுவாச பாதையை விட்டு விலகிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே மெய்யாகும்.

### இ ) அநேக வேதனைகள்

"பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசித்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்." **(1 தீமோ 6:10).**

பணஆசையுள்ளவர்கள் தங்களை தாங்களே அநேக வேதனைகளாலே உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது எவ்வளவு வேதனையான ஒன்று. இது, லேகியோன் என்னும் பிசாசு பிடித்தவன், தன்னை வேதனைப்படுத்துகிறேன் என்று அறியாமல், தன்னைத் தானே காயப்படுத்திக்கொண்டது போல் அல்லவா உள்ளது **(மாற்கு 5:1–20).**

நம்மை நாமே அழிக்கிறோம் என்று அறியாமல், நம்மையே அழித்துக்கொள்வது என்பது மிகவும் கொடுமையான செயல் அல்லவா? ஆனால் இதைத்தான் பணஆசை என்னும் கொடிய பாவநோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொருவரும் செய்துகொண்டிருக்கின்றனர்.

இப்படிப் பண ஆசையின் பாதையில் சென்ற சிலர், பொருளாசையானது தங்கள் ஆரோக்கியத்தையும், குடும்ப வாழ்க்கையையும், பிள்ளைகளின் ஒழுக்கத்தையும் பெருமளவு பாதித்திருப்பதை உணருகிறார்கள். ஆனாலும், அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து பழகிவிட்டதாலும், இந்த சமுதாயமும் (நவீன உலகம்) அதையே தொடர்ந்து வலியுறுத்துவதாலும் என்ன நஷ்டபட்டாலும், அந்த வாழ்விலிருந்து வெளியில் வர மறுக்கின்றனர்.

**பிர 5:11–13** "பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதை காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன? வேலைசெய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய்ப் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வத்துடைய பெருக்கோ அவனைத் தூங்கவொட்டாது. சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு; அதாவது, ஐசுவரியமானது அதை உடையர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்."

## 4. பண ஆசையை மேற்கொள்வது எப்படி ?

இந்த தீமையான பண ஆசையை விட்டு விலகியிருக்க,

நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவதும் மிக அவசியம்.

**அ ) போதும் என்ற மனம் வேண்டும்**

**1 தீமோ 6:6–8** "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம்."

'திருப்தியின்மையே' பண ஆசையினை தூண்டும் மூல காரணி. திருப்தியின்மைக்கு காரணம் மற்றவர்களுடன் நம்மை ஒப்பிடுதல். நமது தேவன் போதுமானவர் என்று விசுவாசிக்கிற நாம், தனிப்பட்ட வகையிலும் நம் ஒவ்வொருவருக்குமே போதுமானவராயிருக்கிறார் என்பதையும், அவர் கொடுத்த ஒவ்வொன்றும் போதுமானதே, என்றும் விசுவாசித்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

நாளைக்கே நீங்கள் செல்வந்தராக ஆகிவிட்டால் என்ன செய்வீர்கள்? வேலையைக் குறைத்துக் கொண்டு வாழ்க்கையை அனுபவிக்க தொடங்குவீர்களா ? வேலைக்கு விடை கொடுத்துவிட்டு, உங்கள் குடும்பத்தாரோடும் நண்பர்களோடும் அதிக நேரத்தைச் செலவழிப்பீர்களா? நீங்கள் நம்பும் தேவனுடைய விருப்பப்படி ஊழியம் செய்ய துவங்குவீர்களா? ஆனால், செல்வந்தர்களாகும் அநேகர் மேற்குறிப்பிட்ட எதையும் செய்வதில்லை என்பதுதான் ஆச்சரியமான விஷயம். அதற்குப் பதிலாக அவர்கள், மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதிலேயே பேயாய் அலையத் தொடங்குகிறார்கள். தங்கள் மீது விழுந்துள்ள புதிய கடன்களை அடைப்பதற்காகவோ, இன்னும் கோடி கோடியாய் சேர்ப்பதற்காகவோ இப்படி அலைகிறார்கள். வறுமை என்பது ஏழைகள் இருப்பதினால் அல்ல, பணக்காரன் இன்னும் திருப்தியடையாததினாலேயே இருக்கிறது என ஏதோ ஓர் புத்தகத்தில் வாசித்தேன்.

பைபிள் இதை தெளிவாய் சொல்கிறது. **பிர 5:10** "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே."

**ஆ ) நம்பிக்கையை தேவன் மீது வைக்க வேண்டும்**

**1 தீமோ 6:17** "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும்ந மக்குச்ச ம்பூரணமாய்க்கொடுக்கிறஜீ வனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும்."

தேவன் கொடுத்திருக்கிறவைகளின் மீது, நம் பார்வை மற்றும் மனதை வைத்துவிடக்கூடாது. பணக்கார வாலிபன் நித்திய ஜீவனை கொடுக்கிறவரிடம் வந்தும், நித்தியஜீவனை பெற முடியாமல் போனதற்கு காரணம், அவனது இருதயமும், நம்பிக்கையும் தேவன் கொடுத்த செல்வத்தின் மீது இருந்துதான் அல்லவா? நாமும் அவ்வாறு நித்தியத்தை இழந்துவிடக்கூடாது என்பதை குறித்து கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், தேவன் நமக்கு கொடுத்த செல்வங்களினால் அல்ல, மாறாக, தேவனாலே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். **(மத் 4:4; மத் 6:25–34)**

**இ ) தொடந்து தாராளமாக நன்மை செய்ய வேண்டும்**

**1 தீமோ 6:18–19** "நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு."

பண ஆசை என்னும் கொடிய பாவநோயினால் நாம் தாக்கப்படாதிருக்க, சோர்ந்து போகாமல் தொடர்ந்து நன்மை செய்கிறவர்களாய் இருப்போம். நம்மிடம் உள்ள எதுவும் நம்முடையது அல்ல, மாறாக, அது தேவனுடையது. அதை ஏன் அவர் நமக்கு கொடுத்தார்? பதில் மிகவும் எளிமையானது; அடிமையாகவே சாகவேண்டிய எஸ்தர் பேரரசியானதற்கு என்ன நோக்கம் தேவன் கொண்டிருந்தார் ? **(எஸ்தர் 4:14).** அதே நோக்கம் தான் நமக்கு அவர் செல்வத்தை (பணம்) கொடுத்ததற்கும் பொருந்தும். அதை நாம் உணரும் பட்சத்தில் துரோகிகளுக்கும், நன்யறிதாவர்களுக்கும் நன்மை செய்கிற, நம்முடைய பிதாவாகிய தேவனை போலவே நாமும் இருக்க முடியும்.

பிரியமானவர்களே ! நாம் ஏன் இங்கே இருக்கிறோம்? நாம் எங்கே எதை நோக்கிச் செல்கிறோம். நம்மை நாமே நிதானித்து, யோசித்து செயல்படுவோம்.

பண ஆசை என்னும் கொடிய பாவத்தை மேற்கொள்ள தேவன் அருள்புரிவாராக!

# பண ஆசையும் பரிசுத்த பெண்களும்

பேபி ராஜா



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு, கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் சொல்லி எழுதும் செய்தி.

சகோதரிகளே! பெண்களாகிய நமக்கு, நமது பிள்ளைகளின் படிப்பு குடும்ப தேவைகள், வீட்டின் மற்ற செலவுக்கும் பணம் அதி முக்கியமான, அவசியமான, தேவையான ஒன்றாக இருக்கிறது.

ஆனால், பணம் தான் நம்மை எல்லா விஷயங்களிலும் வாழ வைக்கிறது என்று பணத்திற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துவிடக்கூடாது. அதின் மேல் அதிக ஆசை வைக்க கூடாது. பண ஆசை எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலர் **1தீமோ 6:10ல்** தேவ ஆவியினால் கூறுகிறார். பாருங்கள் சகோதரிகளே! இவ்வுலகத்தில் வாழ பணம் தேவை தான், ஆனால் அதை எப்படி செலவிட வேண்டும் என்று அறிந்திருக்க வேண்டும்.

நாம் இதை வேதாகமத்தில் உள்ள சகோதரிகள் மூலம் கற்றுக்கொள்ளவும் அறிந்துகொள்ளவும் முடியும். வேதாகமத்தில் நீதிமொழிகள் புத்தகத்தில் குணசாலியான ஒரு பெண்ணைக் குறித்து கூறும்போது "அவள் கைகளினால் ஆட்டு மயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள்." **(நீதி 31:13).**

**நீதி 31:11, 12ல்** கூறப்பட்டது போல, "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்து குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்கு தீமையையல்ல, நன்மையே செய்கிறாள்" என்று அவளுடைய பரிசுத்த நடத்தையைக் குறித்து சாலமோன் ஞானி கூறுகிறார்.

..."தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சை தோட்டத்தை நாட்டுகிறாள்." **(நீதி 31:16)**

தான் சம்பாதித்த பணத்தின் மூலம், ஏழைகளுக்கும் சிறுமையானவர்களுக்கும் உதவுகிறாள். **(நீதி 31:20)**

"அவள் உடைய பலமும் அலங்காரமுமாய் இருக்கிறது; வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்" **(நீதி 31:25)** என்று கூறப்பட்டதால், அவள் தான் சம்பாதித்த பணத்தை சரியான முறையில் பயன்படுத்தியிருப்பதால், எதிர்காலத்தை குறித்து பயப்படவில்லை என்று அறிகிறோம்.


இந்த குணசாலியான ஸ்தீரியின் மூலம் நாம் பரிசுத்த நடத்தை குறித்தும், பணத்தை எவ்விதம் பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறித்தும் கற்றுக்கொள்ளலாம். யோவன்னாள், சூசன்னாள் போன்றோர் தங்கள் ஆஸ்திகளில் அவருக்கு ஊழியம் செய்தனர். ஏழை விதவை தன் ஜிவனை விட தேவனை நேசித்து 100 நதவீத காணிக்கை கொடுத்தாள். தொற்காள் மிகுந்த தருமங்களை செய்தாள். சூனேமியாள், லீதியாள் போன்றோர் தேவ ஊழியர்களை விசாரித்தனர். என பெரிய பட்டியலே சொல்லிக்கொண்டே போகலாம்.

அப்போஸ்தலர் 5ம் அதிகாரத்தில் மேலும் ஒரு சகோதரியைக் குறித்து பார்ப்போம். சப்பீராள் என்கிறதான அந்த சகோதரி, தன் கணவருடன் இணைந்து முதல் நூற்றாண்டு சபையின் குறைவுகளை பூர்த்தி செய்ய தன் காணியாட்சியை விற்று கொடுத்த போது, அதன் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தார்கள். மேலும் அதைக் குறித்து பேதுரு வெளிப்படுத்தியபோது, பொய் பேசியதினால், முதலில் கணவனாகிய அனனியா மரித்தான். மரித்துப் போனாள். ஆனால் இதை அறியாமல் பிறகே வந்த மனைவியான சப்பீராள் பேதுரு, 'நிலத்தை இவ்வளவுக்கு தான் விற்றீர்களா?' என்று கேட்ட போது, துணிகரமாய் தேவனுக்கும், பரிசுத்தருக்கும் விரோதமாய், அப்போஸ்தலர் முன்னிலையில் இவ்வளவுக்குதான் விற்றோம் என்று பொய் கூறினாள். இதன் மூலம் அவளது பணஆசையும், அதன் விளைவாக ஏற்பட்ட சரீர மரணத்துடன் ஆத்தும மரணத்தையும் அடைந்தாள் என்பதை அறியலாம். அன்பானவர்களே, பணம் வாழ்க்கைக்கு அவசியமே, ஆனால் பணமே வாழ்க்கையாகக் கூடாது என்று அறிகிறோம். சகோதரிகளாகிய நாமும் பணம், நகை போன்றவைகளின் மீது பைத்தியமாக இருப்பதை விட்டு தேவனை சார்ந்து வாழுவோம்!

# ஆகான்




அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துகிறேன்.



இந்த உலகத்தில் வாழும் அநேகரிடம், உங்கள் வாழ்வின் இன்றியமையாத தேவை என்ன என்று கேட்டால், பணம் தான் என பதில் அளிக்கின்றனர். இவர்களை போன்ற ஒரு எண்ணமுடையவனாக இருந்த, ஆகானைப் பற்றி வேதாகம துணைக்கொண்டு ஆராய்ச்சி செய்வோம் வாருங்கள்.

யோசுவாவின் புத்தகம் 7ம் அதிகாரத்தை தியானப்பகுதியாக எடுத்துக்கொள்ளுங்கள். யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானை கடந்து, 'ஆயி' என்ற பட்டத்தை பிடிக்க சென்றனர், அந்த பட்டணத்தை வேவு பார்த்த போது, 2000 அல்லது 3000 பேர் சென்றால் அந்த பட்டணத்தை ஜெயித்து விடலாம் என்ற தகவலோடு யுத்தம் செய்ய புறப்பட்டனர்.

அப்படி சென்ற போது, அவர்கள் ஜெயிப்பதற்கு பதிலாக தோற்றுப் போயினர். இதற்கான காரணம் அறிய, யோசுவா தேவனிடம் ஜெபிக்கிறார். தேவனோ, இஸ்ரவேலர் பாவம் செய்தார்கள் என்றார். அது என்னவென்று அறிந்தபோது, ஆகான் என்பவன் பண ஆசையினால் பொன், வெள்ளி, மற்றும் பாபிலோனிய சால்வையை எடுத்து ஒளித்து வைத்தான். அவனது இந்த பாவ செயலே தோல்விக்கு காரணமாக இருந்தது.



அன்பான வாலிப சகோதரனே, சகோதரியே! சற்று யோசித்துப் பாருங்கள்! நாமும் பண ஆசையினால் தேவனையும், அவர் சமூகத்தையும் புறக்கணித்து, வேலை, சம்பாத்தியம் என பண ஆசையினால் இந்த உலகத்தின் பின்னே ஓடிக் கொண்டிருந்தால், நமக்கும் ஆகானுக்கும் என்ன வித்தியாசம்? ஆகானைப் போலவே நமக்கும், நம்மை சார்ந்தவர்களுக்கும் தோல்வி மாத்திரமே மிஞ்சும்.

வாழ்க்கையில் ஜெயிக்க எல்லாருமே போராடுகிறோம். அது பணத்தால் மட்டுமே சாத்தியமாகும் என்று நினைத்தால் அது தவறு. வேதம் சொல்கிறது "பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது" **(1தீமோ 6:10)** என்று. மேலும் **1தீமோ 6:11ல்** "நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு" என்றும் வாசிக்கிறோம்.

ஆகான் பணத்தை நேசித்தான்; அதனால் அவனுக்கும், அவன் குடும்பத்திற்கும் என்ன ஏற்பட்டது என்பதை **(யோசு 7)** நாம் அறிவோம். பண ஆசை வரும்போது, ஆகானை நினைவில் கொள்வோம். **மத்தேயு 6:33ன்** படி முதலாவது தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்!

**அண்ணன்** J.P.

## சிறுவருக்கான கேள்விகள்

1. கேயாஸி செய்த பாவம் என்ன?
2. அவனுக்கு கிடைத்த தண்டனை என்ன?
3. ஏழை விதவையை இயேசு ஏன் பாராட்டினார்?
4. ஆகான் பாவம் செய்ய காரணம் என்ன?
5. அதினால் அவன் அடைந்த தணங்டனை என்ன?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ராஜா – கரூர்
2. M. ஜோனாத்தனான் – கரூர்
3. A. கெனித் சாம் – சென்னை

# அதிகமாக கொடுத்த ஏழை விதவை

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இம்மாதம், பைபிளில் ஒரு ஏழை விதவை எப்படி காணிக்கை கொடுத்தார்கள் என்பதை குறித்து கற்றுக்கொள்ளலாமா?

ஒரு முறை இயேசு தேவாலயத்தில் காணிக்கை பெட்டிக்கு முன்பாக அமர்ந்தார்; அப்பொழுது அநேக பணக்காரர்கள் வந்து காணிக்கை பெட்டியில் காணிக்கை போட்டார்கள்; வசதியானவர்கள் எல்லாம் தங்களிடம் உள்ளதிலிருந்து நிறைய காணிக்கை போட்டார்கள், ஆனால் அந்த கூட்டத்தில் ஒரு ஏழை விதவை இருந்தாங்க. அவர்களிடம் இருந்ததே மொத்தம் இரண்டு காசுகள் தான். அதை என்ன செய்தாங்க தெரியுமா? அந்த இரண்டு காசையும் காணிக்கை போட்டுவிட்டாங்க.

நாம் அங்க இருந்தா என்ன செய்திருப்போம்? ஒரு காசை போட்டுவிட்டு, ஒரு காசை நமக்கு வைத்திருப்போம் அல்லவா? இல்லைனா, காணிக்கை போடாமலே, நம் வறுமையும் இயலாமையும் தேவனிற்கு தெரியும் என்று எண்ணி இருந்திருப்போம் தானே? ஆனால், இந்த ஏழைவிதவையை பாருங்கள். அடுத்த வேளை சோறு இல்லை, பட்டினி கிடக்க வேண்டும் என்பதை பற்றி கவலைப்படாமல், தன்னிடமிருந்த மொத்த காசுகளையும் கர்த்தருக்கு காணிக்கையாக கொடுத்துவிட்டாள்.

இந்த குணம், அவர்களுக்கு எப்படி வந்திருக்கும்? ஆலயத்திற்கு போவதற்கு முன்னதாகவே ஆண்டவருக்கு ஏதாகிலும் கொடுக்க வேண்டும் என்று அவுங்களுக்கு ஆசை, இருந்திருக்கும், ஒரு வேளை வீட்டில் தேடி பார்த்தால் இரண்டு காசுதான் இருந்தது, ஒன்றை வைத்துக் கொண்டு ஒன்றை காணிக்கை போட்டிருக்கலாம் ஆண்டவர் திட்டியிருக்க மாட்டார். ஆனால் தன்னுடைய ஜீவனுக்காக உள்ளதை எல்லாம் போட்டுவிட்டாங்க. ஏன் தெரியுமா? படைத்த கடவுள் மேலே அவர்களுக்கு இருந்த அன்பு; மற்றும், அவர் என்னை நடத்துவார் என்றும், அவர் தான் என் பாதுகாப்பு என, பணத்தை விட அவர் மீது கொண்டிருந்த விசுவாசம். அதனால் ஆண்டவர் இயேசு எல்லாரையும் விட இந்த ஏழை விதவைதான் அதிகமாக காணிக்கை கொடுத்தாள் என்று பாராட்டினார்.



பிள்ளைகளா! நீங்கள் கர்த்தருக்கு என்று எவ்வளவு கொடுக்கிறீர்களா? கடவுள் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் விசுவாசத்தினாலே அவருக்கு காணிக்கை கொடுக்கிறீர்களா? இந்த ஏழை விதவைப் போல செய்தால், கடவுள் உங்களையும் பாராட்டுவார் மற்றும் ஆசீர்வதிப்பார்.

**மனைவசனம்: லூக்கா 6:38**

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்."

இப்படிக்கு, உங்கள்
அண்ணன், **அன்பு ஏசுதாஸ்**


# பண ஆசையின் சாபம் – கேயாஸி

ஹாய் குட்டீஸ் ! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நீங்கள் நன்றாக படித்து காலாண்டு தேர்வில் நிறைய மதிப்பெண் பெற நாங்கள் ஜெபிக்கிறோம்.

முன்னொரு காலத்தில், இஸ்ரவேல் தேசத்தில், எலிசா என்ற பெயர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி வாழ்ந்து வந்தார். இவர் அந்நாட்களில் தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு சொல்லி வந்தார். இவர் தேவனுக்கு பயந்து உண்மையும் உத்தமமுமாகவும் வாழ்ந்தார். இவரைக் கொண்டு தேவன் அநேக அற்புதங்களை செய்தார். அவருக்கு ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் பெயர் கேயாஸி.

அந்த நாட்களில் சீரியா நாட்டு ராஜாவின் படைத்தலைவன் நாகமான் என்பவன் குஷ்டரோக நோயினால் பாதிக்கப்பட்டார். அவனுடைய வீட்டில் இஸ்ரவேல் நாட்டிலிருந்து அடிமையாக

கொண்டுவரப்பட்ட ஒரு சிறு பெண் வேலை செய்து வந்தாள். அவள் இஸ்ரவேல் நாட்டிற்கு சென்று எலியா தீர்க்கதரிசியை சந்தித்தால் நோய் சுகமாகிவிடும் என தன் எஜமானுக்கு சொன்னாள். அதின்படியே நாகமானும் அரசனிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு, வெகுமதியோடும், போர்ச்சேவகரோடும் எலிசா தீர்க்கதரிசியிடம் சென்றார்.



எலிசா நாகமானிடத்தில், யோர்தானில் ஏழு தரம் மூழ்கி எழுந்தால் சுகமாவாய் என்று சொன்னார். அவர் சொன்னபடியே செய்து நாகமான் சுகமானான். ஆகையால் நாகமான், தேவனுடைய தீர்க்கதரிசியாகி எலிசாவிற்கு காணிக்கை கொடுக்க வந்தார்; எலிசாவோ வாங்க மறுத்து விட்டார்.

இதைக் கண்ட கேயாஸி என்ன செய்தான் தெரியுமா ? என் எஜமான் (எலிசா) வாங்கவில்லை என்றால் பரவாயில்லை, நான் அவைகளை வாங்கிவிடுவேன் என்று சொல்லி, நாகமானின் பின்னே ஓடினான். அவன் ஓடிவருவதைக் கண்ட நாகமான் ரதத்தை நிறுத்த சொல்லி, என்ன என்று விசாரித்தான். அதற்கு கேயாஸி : தீர்க்கதரிசியின் மகன்களாகிய வாலிபர்கள் இப்பொழுது தான் வந்தார்கள். அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியும், இரண்டு உடையும் வேண்டும் என்று எலிசா கேட்டதாக கேட்டு, அவனிடம் பொய் பேசினான்.

நாகமானோ, அவன் கேட்டதைவிட அதிகமாக கொடுத்தான். அவன் வாங்கினவைகளை கேயாஸி, தன்னுடைய வீட்டில் ஒழித்து வைத்துக்கொண்டு, ஒன்றுமே செய்யாதது போல் எலிசாவிடம் வந்தான். எலிசா, கேயாஸியிடம் எங்கே போனாய் என்று கேட்டார். கேயாஸியோ, எங்கும் போகவில்லை, இங்கே தான் இருந்தேன் என பொய் சொன்னான். ஆனால் தேவனோ, கேயாஸி செய்ததை எலிசாவிற்கு வெளிப்படுத்தினபடியால், எலிசா கேயாஸியைப் பார்த்து; நாகமானின் குஷ்டம் உனக்கும் உன் சந்ததிக்கும் வரும் என்றார். அதுபோலவே உடனே வந்தது.

குட்டீஸ், கேயாஸி பண ஆசைக்கொண்டு பொய் சொல்லி தலைமுறைக்கும் தண்டிக்கப்பட்டார் அல்லவா? நாமும் பண ஆசையினால் தேவன் கொடுத்த வாழ்வை வீணடிக்கிறவர்களாக, சாபத்திற்கு கொண்டு செல்லாமல் இருப்போம். தேவன்மீதும், அவரது வார்த்தை மீதும், அவரது சபையின் மீதும் ஆசைகொள்வோம். அப்பொழுது தேவன் ஆசீர்வதிப்பார்!

**மனன வசனம் : 1 தீமோ 6:10**

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."

# யூதாஸ் – பண ஆசையினால் ஆண்டவரை விற்றவர்

ஹாய் செல்ல குட்டீஸ்! உங்கள் எல்லாருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவனாக இருந்தவர் யூதாஸ்காரியோத். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டவரோடு ஊழியத்தில் பங்கு பெற்றவன். ஆண்டவர் இவனுக்கு மிகப்பெரிய பொறுப்பை கொடுத்திருக்கிறார். அதென்னவென்றால் இவன் தான் ஆண்டவரின் ஊழிய பணங்களை வைத்து பராமரிக்க வேண்டும்.

ஒருமுறை ஒரு பெண் வந்து, ஆண்டவருக்கு விலைமதிப்பு மிக்க நளதம் என்னும் பரிமள தைலத்தினை பூசினாள். இந்த தைலத்தை விற்று தரித்திரருக்கு கொடாமல், வீணடிக்கிறாய் என சொல்லி அந்த பெண்ணை திட்டினான். அவர் இதை தரித்திரர்களை குறித்து கவலைபட்டு சொல்லவில்லை; மாறாக, அவர் பண ஆசை உடையவராக இருந்தபடியினால் சொன்னார்.

இவரது பண ஆசையின் உச்சம் என்ன தெரியுமா? இந்த யூதாஸ் பிரதான ஆசாரியரிடத்திற்கு

போய், 30 வெள்ளிக் காசுவிற்காக காட்டிக்கொடுக்க சதி திட்டம் தீட்டினான். ஒரு முறை ஆண்டவர் இயேசு, ஜெபிக்கச் சென்றார். அங்கே அவர் ஜெபித்துக்கொண்டிருந்த வேளையில், யூதாஸ், தான் திட்டமிட்டபடியே பிரதான ஆசாரியர் மற்றும் போர்சேவர்களை கூட்டிக்கொண்டு, திருடனை பிடிக்க செல்வது போல இயேசுவை பிடிக்க சென்றனர்.

அந்த தோட்டத்தில் யூதாஸை கண்ட ஆண்டவர், நண்பனே என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்று கேட்டார். யூதாஸ் ஆண்டவரை முத்தமிட்டான்; ஆண்டவரோ, ‘சிநேகிதனே முத்ததினாலே என்னை காட்டிக்கொடுத்துவிட்டாயே’ என அவனிடம் சொன்னார். யூதாஸிற்கு ஆண்டவரைவிட பணம் முக்கியமாக தெரிந்தபடியினால், ஆண்டலரை 30 வெள்ளிக்காசுவிற்காக விற்றுப்போட்டான். அவர்களோ, இயேசுவை பிலாத்துவினிடம் கொண்டு போய், சிலுவையில் அடித்து கொலை செய்ய வைத்தார்கள்.

குட்டீஸ்! யூதாஸிற்கு பணத்தின் மீது இருந்த ஆசையினால், அவனது ஆண்டவரையே கொலை செய்ய விற்றுப்போட்டான். அவனுக்கு ஆண்டவர் மேல் அன்பும், ஆண்டவரிடத்தில் நன்றியும் இல்லாமல் போய்விட்டது. ஏன்? பண ஆசை! ஆகையால் நீங்கள் பண ஆசையில்லாமல், ஆண்டவர் மீது அன்பும், அவரிடத்தில் நன்றியும் உள்ளவர்களாய் வளருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனைவசனம்: 1 தீமோத்தேயு 6:9**


“ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.”

**– ஏஞ்சலின் கமலம்**

பொதுவான செய்திகள்

# பழங்கள் & தானியங்களின் பயன்கள்

## பச்சை பட்டாணி




இருதய நோய்களை தவிர்க்க உதவும்

மலச்சிக்கலை போக்கும்

இரத்த கொழுப்பை குறைக்க உதவும்

## செவ்வாழை



வைட்டமின் B6 நிறைந்தது

உடல் சுறுசுறுப்படையும்

நெஞ்செரிச்சலை போக்கும்

## பூசணிக்காய்



கண் பார்வையை மேம்படுத்தும்

மலச்சிக்கலை போக்கும்

வைட்டமின் B2 அடங்கியது.

ஒற்றை தலைவலி போக்கும்

## புதினாக்கீரை



அஜீரணம் போக்கும்

குமட்டல் மற்றும் தலைவலி போக்கும்

சளி மற்றும் இருமலுக்கு நல்லது

## யூக்கலிப்டஸ் எண்ணெய்



தசை வலியிலிருந்து நிவாரணம் தரும்

தலைமுடி வளர உதவும்

பற்களை பாதுகாக்கும்

## ரவை



உடல் எடை குறைக்க உதவும்

இரும்பு சத்து அடங்கியது

வைட்டமின் E மற்றும் நார்ச்சத்து நிறைந்தது

## கேழ்வரகு



இரத்த கொழுப்பை குளைக்கும்

உடல் சோர்வை நீக்கும்

ஜீரணம் அதிகரிக்கும்

தாய்ப்பால் சுரப்பதை அதிகரிக்கும்

## முலாம்பழம்



அல்சரை போக்க உதவும்

உடல் எடை குறைக்க உதவும்

மலச்சிக்கலை போக்கும்

# பாடம் : 6 ரோமர் : விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல்

## தலைப்பு

இது பவுலின் முதல் நிருபமாக, அல்லது கடிதமாக உள்ளது. அவருடைய நிருபங்கள் யாவையும், அவற்றைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களினாலேயே குறிப்பிடப்படுகின்றன. இந்தக் கடிதம் "ரோமபுரியில் உள்ள தேவப்பிரியர்கள் யாவருக்கும்" அதிலும் குறிப்பாக "பரிசுத்தவன்களாய்," அல்லது கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கும் எழுதப்பட்டது **(1:2).**

## பின்னணி

பவுல் பதிமூன்று அல்லது பதினான்கு (எபிரெயருக்கு எழுதப்பட்ட திருப்பத்திற்கான குறிப்புகளை கவனிக்கவும்) கடிதங்களை எழுதினார். அவரது கடிதங்கள் சபைகளுக்கான கடிதங்கள் **(ரோமர் – 2 தெசலோனிக் கேயர்)** மற்றும் தனிநபர்களுக்கான கடிதங்கள் **(1 தீமோத்தேயு – பிலேமோன் அல்லது எபிரெயர்)** என்று பிரிக்க முடியும்.

ரோமருக்கு எழுதிய நிருபம் முதன் முதலாக எழுதப்பட்டது என்பதால் அல்ல, ஆனால் அது பவுலின் மிகச்சிறந்த எழுத்தாக்கம் என்பதாலேயே நிருபங்களில் முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது. பவுலின் மற்ற பல கடிதங்களைப்போல் இன்றி, ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு சபை குழுமத்தின் குறிப்பிட்ட பிரச்சனைகளுக்குப் பதில் அளிப்பதில்லை; மாறாக, இது "வேரில் இருந்து கனி வரையில், கிறிஸ்தவத்தைப் பற்றிய உணர்வுப் பூர்வமான கூற்றாக" உள்ளது.

ரோமருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கப்பகுதியும் முடிவுப்பகுதியும் **(1:9–13: 15:22–32: 16:1, 23)** இந்த நிருபத்திற்குப் பின்னணி சிலவற்றைத் தருகிறது. பவுல் அகாயாவில் (குறிப்பாக, கொரிந்து நகரத்தில்) இருந்தார். அவர் எருசலேமில் இருந்த ஏழைப் பரிசுத்தவான்களுக்கு நிதி சேகரிதலை முடித்து இருந்தார். எனவே அது அவர் தமது மூன்றாவது ஊழிய பயணத்தை முடித்திருந்த காலமாய் இருந்தது. பவுல் இந்தக் கடிதத்தை அனேகமாக, எருசலேமுக்குப் பயணமாவதற்கு முன்பு கொரிந்து நகரத்தில் தங்கியிருந்த மூன்று மாதங்களின்போது எழுதியிருக்கலாம் **(நடபடிகள் 20:2, 3: ரோமர் 16:1ஐக் கவனிக்கவும்)** மற்றும் கெங்கிரேயா என்பது கொரிந்து நகரத்தின் முக்கிய துறைமுகமாய் இருந்தது என்பதையும் நினைவில் வைக்கவும்). இந்த நிருபத்தை எழுதிய காலம் கி.பி.57ன் பிற்பகுதியாகவோ அல்லது 58ன் முற்பகுதியாகவோ இருக்கலாம்.

பவுல் ரோமபுரிக்குச் செல்ல வேண்டும் என்று நீண்ட நாட்களாக விரும்பியிருந்தார் **(நடபடிகள் 19:21ஐக் கவனிக்கவும்).** முதலில் எருசலேமுக்கும், பின்பு ரோமபுரிக்கும், அங்கிருந்து ஸ்பானியா நாட்டிற்கும் செல்ல வேண்டும் என்பதே அவரது திட்டமாய் இருந்தது. ரோமபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதியபோது, தாம் எருசலேம் சென்று சேருகையில் இறக்க நேரிடலாம் என்று அறிந்திருந்தார் **(நடபடிகள் 20:22–25: 21:13, 14).** ஆகையால், எழுதுவதற்கு அவர் விருப்பநோக்கங்கள் பலவற்றைக் கொண்டிருந்தார். அவர் ரோமபுரிக்குப் பயணம் செல்ல நேர்ந்தால், இக்கடிதம் ஒரு பயனுள்ள பயணத்திற்குப் பாதை அமைப்பதாய் இருக்கும். இருப்பினும், அவர் அங்கு செல்வது தடைசெய்யப்பட்டால், இந்த நிருபமானது அவர் நிறைவேற்ற நம்பிக்கையாய் இருந்த பல விஷயங்களை நிறைவேற்றுவதாயிருக்கும் **(1:11).**

இப்புத்தகம் தன்னில்தானே இயல்பாக இரு பகுதிகளாகப் பிரிந்துள்ளது. முதல் எட்டு அதிகாரங்கள் "உபதேச" பகுதியாகவும் இப்புத்தகத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாகவும் உள்ளன; கடைசி எட்டு அதிகாரங்கள் நடைமுறைப் பயன்பாட்டுப்பகுதியாக உள்ளன, இவை முதல் எட்டு அதிகாரங்களில் முன்வைக்கப்பட்டுள்ள சத்தியத்துடன் தொடர்புடைய நடைமுறை விஷயங்களை உரைக்கின்றன. (வரைகுறிப்பைக் காணவும்).

"விசுவாசத்தினால் நீதிமான்களபக்கப்படுதல்" என்பதே இப்புத்தகத்தின் ஆய்வுக்கருத்தாகும். **பவுல் 1:17ல்** ஆபகூக் 2:4ஐ மேற்கோள் காட்டுவதன்மூலம் தனது ஆய்வுப்பொருளை உரைக்கின்றார்: "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி." முன்னதாக எழுதப்பட்ட ஒரு

நிருபத்தில் உள்ள சிந்தனைகள் பலவற்றை ரோமருக்கு எழுதிய நிருபமானது விரித்துரைக்கிறது (அந்தப் புத்தகத்திற்கான குறிப்புகளைக் காணவும்). ரோமருக்கு எழுதிய நிருபத்தின் சில பகுதிகள் புரிந்துக்கொள்ளக் கடினமானவைகளாக உள்ளன **(2பேதுரு 3:15, 16).** ஆனால் இப்புத்தகமானது அதைப் புரிந்து கொள்வதற்கான போராட்டத்திற்கு மாபெரும் ஊக்குவிப்புப் பரிசுகளை அளிக்கிறது. ஒரு போதகர் வழக்கமாகக் கூறுகிறபடி: "நீங்கள் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் புரிந்துகொண்டால், தேவன் உங்களைப் புரிந்து கொள்கின்றார்!" **வரைகுறிப்பு**

**அறிமுகம் (1:1–17).**

I. உபதேசரீதியான விஷயங்கள் **(1:18–3:39).**

அ. ஆக்கினைத்தீர்ப்பு **(1:8–3:20).**

1. புறஜாதியார்.
2. யூதர்கள்.

ஆ. நீதிமானாக்கப்படுதல் **(3:21–5:21).**

இ. பரிசுத்தமாக்கப்படுதல் **(6: 7).**

ஈ. மகிமைப்படுத்தப்படுதல் **(8).**

II. நடைமுறைக்குரிய விஷயங்கள் **(9–16).**

அ. விளக்கம் **(9–11).** விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் ஒப்புவராக்கப்பட்டது:

1. இஸ்ரவேல் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தம்.
2. தேவனுடைய உண்மைத்தன்மை.

ஆ. நடைமுறைப் பயன்பாடு **(12:1–15:13).**

**முடிவுரை [15:14–16:27].**

**ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்**

விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் என்ற உபதேசம் வேதாகமத்தில் மிகவும் ஆறுதல் அளிக்கும் ஒன்றாக உள்ளது. தேவன் பூரணமான கீழ்படிதலுக்காகக் கண்ணோக்குவதில்லை (அவர் அப்படிச் செய்தாரென்றால், எல்லோரும் இழந்து போகப்பட்டிருப்போம்: 3:23; 6:23). மாறாக, அவர் விசுவாசத்திற்காக கண்ணோக்குகின்றார்; அவர் நமது இருதயங்களில் விசுவாசத்தைக் கண்டார் என்றால், அதை அவர் நாம் நீதிமான்களாய் இருந்ததற்கான விஷயமாக எண்ணுகின்றார் (5:4). இருப்பினும், பவுல் "விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு" என்று போதிக்கவில்லை என்பதை வலியுத்த வேண்டும். அவர் கூறுகின்ற விசுவாசமானது கீழ்ப்படிதல் உள்ள விசுவாசமாகும் என்பதை அவர் இக்கடிதத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் குறிப்பிடுகின்றார். **(1:5: 16:26). 10:16ல்** அவர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துகின்றார்.

ரோமருக்கு எழுதிய நிருபம் ஒரு அழகுமிகுந்த மோதிரத்திற்கு ஒப்பாக, 8ம் அதிகாரம் அம்மோதரத்தில் உள்ள வைரமாக, **வசனம் 28** அவ்வைரத்தில் இருந்து வெளிவரும் ஒளிக்கதிராக ஒப்பிடப்பட்டுள்ளது. **ரோமர் 8:28** தேவனுடைய அருளிரக்கம் பற்றி வேதாகமத்தில் உள்ள மாபெரும் வசனப்பகுதியில் ஒன்றாக உள்ளது. அது எல்லாவற்றையும் நன்மையானது என்று கூறுவதில்லை, ஆனால் தேவன் எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாகச் செயல்படுத்துகின்றார் என்று கூறுகிறது. தேவன் ஜீவனுள்ளவராய் இருக்கின்றார் மற்றும் அவர் உலகத்தில் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் படியாகச் செயல்படுகின்றார்.

**ரோமர் 12ஐக்** காட்டிலும் வேதாகமம் முழுவதிலும் அதிகம் நடைமுறைக்கு உகந்தபகுதியாக வேறு எதுவும் இருப்பதில்லை. அதைக் கற்றுக் கொள்ளுங்கள்; பின்பு அதன்படி வாழுங்கள்!

**சென்ற மாதம் விடுபட்டவர்கள்**

1. M. ராஜா – கரூர்
2. M. ஜோனாத்தான் – கரூர்
3. A. கார்பஸ் பிலேமோன் – ஒத்தக்கடை
4. A. ஹானா ஜோதி – ஒத்தக்கடை
5. K. கெட்ஸி நேசகுமாரி – அரசரடி
6. K. பெட்டி பேபிராணி – அரசரடி
7. K. பிளஸ்ஸி தேவகிருபை – அரசரடி
8. A. கெனித் சாம் – சென்னை

## செப்டம்பர் மாதக் கேள்விகள்

1. தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களை சேக்கிறவன் எப்படி இருக்கிறான்?

2. இஸ்ரவேலர் எந்த இரண்டு காரியங்களில் தேவனை வஞ்சித்தார்கள்?

3. நன்மை செய்ய திராணி இருக்கும் போது, செய்யக்கூடாதது என்ன?

4. பணப்பிரியன், செல்வப்பிரியன் என்ன ஆவதில்லை?

5. இயேசு, எங்கே பொக்கிஷங்களை சேர்த்துவைக்கச் சொன்னார்?

6. மிகுந்த ஆதாயத்தை தரும் தேவபக்தி எது?

7. எல்லா தீமைக்கும் வேர் எது?

8. "ஐசுவரியவானாக வேண்டுமென்று பிரயாசப்படாதே" என வாசிப்பதெங்கே?

9. பூமியும் அதன் நிறைவும் யாருடையது?

10. ''ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்'' என வாசிப்பதெங்கே?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-10-2018**


அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431


### சென்ற இதழ் பதில்கள்

1. 1 தீமோ 5:1-2
2. எபி 13:17
3. 1 ராஜா 12:13,16
4. நீதி 13:1
5. லேவி 19:32
6. உபா 5:16
7. உபா 27:16
8. யோபு 12:12
9. யோபு 32:6
10. நீதி 20 :29

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mr. சூசை மரியன் – சென்னை
2. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
3. J. விஜய் – ஒத்தக்கடை
4. G. ஏஞ்சலம்மாள் – ஒத்தக்கடை
5. Miss. டேப்னி ஜ்னித்தா – சென்னை
6. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – ஒத்தக்கடை
7. Mrs. ஹெலன் திலக் – மதுரை
8. Y. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை
9. Mrs. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
10. Mrs. தேவி ராஜாசிங் – திருப்பூர்
11. N.V. அஜித்தா – கன்னியாகுமாரி
12. Mrs. மேரி ராஜ் – மதுரை
13. Mrs. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
14. Dr.D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
15. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
16. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
17. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
18. S. டேவிட் சாந்தகுமார் – நெல்லை
19. Mrs. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
20. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
21. Mrs. மேரி சாராள் – மதுரை
22. Mrs. லில்லி புஷ்பம் – தூத்துக்குடி
23. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
24. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
25. Mr. சாமுவேல் – தூத்துக்குடி
26. Mrs. ஜானாசிங் சாமுவேல் – கோவை
27. Mrs. ஜேம்ஸ் விக்டர் – திருவள்ளூர்
28. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
29. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
30. S. பாக்கிய ராஜம் – மதுரை
31. Mrs. ஜீவா செல்வராணி – திருச்சி
32. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
33. P. சூரிய பிரியா – திருமங்கலம்
34. Mrs. M. ஈஸ்வரி – கரூர்
35. நேசமணி – நாமக்கல்
36. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
37. Mrs. M. புஸ்பா ராணி – நாமக்கல்
38. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
39. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
40. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
41. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
42. Mrs. ஜீனா வர்க்கீஸ் – கோவை
43. A. ரோஸ்மேரி – சென்னை
44. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – சென்னை
45. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
46. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
47. Mr. கிதியோன் – சிவகங்கை
48. அபிராமி – சிவகங்கை
49. ஜாஸ்மின் கிறிஸ்டி – சிவகங்கை
50. எலிசபெத் – சிவகங்கை

# குடும்பத்திற்காக வேதாகம ஆலோசனை முகாம்



நமது ஆசிரியர்
செய்தியளித்த போது



நமது இணை ஆசிரியர்
செய்தியளித்தத போது



முகாமில் பங்குபெற்றோரில் ஒரு பகுதியினர்



வேத அறிவு போட்டியில் வென்று
பரிசு பெறும் பார்வையற்ற தம்பதி



வேத அறிவு போட்டியில் வென்று
பரிசு பெறும் பார்வையற்ற சகோதரி



T.V. செய்திகள் பார்வையற்றோருக்கு
இலவசமாக D.V.D யாக கொடுக்கப்படுகிறது.

## ஆகஸ்ட் , செப்டம்பரில் திருமுழுக்கில் வசனத்திற்கு கீழ்படிந்தோர்



திருமுழுக்கு பெறுபவர்களுக்கு வேத
பாடம் நடத்தும் துணை ஆசிரியர்



திருமுழுக்கு பெற்ற வாலிப சகோதரன்



திருமுழுக்கு பெற்ற வயதில் மூத்த சகோதரி



(PHYSICALLY & VISUALLY CHALLENGED)





பார்வையற்றோர் முகாம்கள் மற்றும் பார்வையற்றோர் மத்தியில் நடைபெறும் ஊழியங்களின் விளைவாக
திருமுழுக்கு பெற்ற மாற்றுதிறனாளி மற்றும் முதிர்வயதான சகோதரர்கள்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th September 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th September 2018

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



← இம்மாதம் ஏழை பார்வையற்றோருக்கும் திக்கற்ற விதவைகளுக்கும் அரிசி வழங்கப்பட்டது.

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers